அரியலூருக்கு துணை நீதி மன்றம்.

*221 வினா—திரு. செ. சதாசிவம்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், அரியலூரில் சப்-கோர்ட் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) நீதிமன்றங்களின் அதிகார வரம்பு குறித்த குழு அளித்துள்ள அறிக்கையைப் பரிசீலித்த பின்னர், அரியலூரில் துணை நீதிமன்றம் (சப்-கோர்ட்) ஒன்றை ஏற்படுத்துவது குறித்து முடிவெடுக்கப்படும்.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இந்த அறிக்கை வருவதற்கு காலதாமதமாகுமா? அல்லது அறிக்கை வந்து பரிசீலனையில் இருக்கிறதா? என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அறிக்கை வந்துவிட்டது. ஆனால் நாம் நல்ல நோக்கத்தோடு எங்கெங்கு நீதிமன்றங்கள் பரவலாக அமைக்கப்பட வேண்டும் என்று பரிசீலித்தோம். பெரிய அறிக்கை, ஏராளமான நீதிமன்றங்களுக்கு பரிந்துரை செய்யக்கூடிய நிலை இருப்பதால் நிதிப் பிரச்னை வந்திருக்கிறது. ஆகவே எதெதை "ஃபேஸ்ட் ப்ரோக்ராமாக" முன் உரிமை கொடுத்து எடுக்கலாம் என்பதை பரிசீலித்து வருகிறோம்.

டாக்டர் ச. மு. பழனியப்பன்: சப்-கோர்ட்கள் அமைக்க வேண்டும் என்று பல்வேறு பகுதிகளில் இருந்து இந்த அரசுக்கு கோரிக்கைகள் வந்திருக்கின்றன. எனவே, இந்த அறிக்கையை விரைவில் பரிசீலனை செய்து இதற்கான முடிவை விரைவில் மேற்கொள்ள இந்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில் இருந்தும் அப்படிப்பட்ட ஒரு கோரிக்கை இருக்கிறது. ஆனால் குழு அதுபற்றி மாறாகத்தான் பரிந்துரை செய்திருக்கிறது.